| சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம் | |
|---|---|
| நாள் | 14 .06.2024 |
| O.S. No. | 371/2022 |
| வா..சா.1 | A. யோகானந்தம் |

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் -ம் நாள் வாதி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

பெயர் : A. யோகானந்தம் சமயம் :

தந்தை பெயர் : தொழில் :

கிராமம் : வயது :

தாலூக்கா :

முதல் விசாரணை -

நான் இவ்வழக்கில் வாதியான வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது முதல் விசாரணைக்கான சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பில் கீழ் கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன. 30.11.2015 ம் தேதியிட்ட தாட்கோ அளித்த கடிதத்தின் அசல் **வா..சா.ஆ.1**, 29.12.2015 ம் தேதியிட்ட கடன் விண்ணப்பித்தின் அசல் **வா.சா.ஆ 2**, 29.12.2015 ம் தேதியிட்ட கடன் அனுமதி குறிப்பாணையின் அசல் **வா.சா.ஆ.3**, 29.12.2015 ம் தேதியிட்ட அடமான ஒப்பந்தத்தின் அசல் **வா.சா.ஆ.4**, 29.12.2015 ம் தேதியிட்ட ஒப்புதல் கடிதத்தின்அசல் **வா.சா.ஆ.5**, 15.12.2017 ம் தேதியிட்ட உயிர்ப்பு கடதத்தின் அசல் **வா.சா.ஆ.6**, 13.11.2019 ம் தேதியிட்ட உயிர்ப்பு கடதத்தின் அசல் **வா.சா.ஆ.7**, 03.07.2021 ம் தேதியிட்ட கணக்குப்பட்டியளின் கணக்கு நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராது கோரியுள்ள படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.